திராவிடமும் ஆரியமும்

29
04

திராவிடமும் ஆரியமும்

ஆக்கியோன்

"விவேகி"

வெளியிடுவோர்

திராவிட கலா நிலையம்

55, முக்தாருன்னிஸா பேகம் தெரு,

மவுண்ட் ரோடு, சென்னை.

பதிப்புரிமை உடையது

விலை 0–5–0

அட்டவணை

			பக்கம்
	முகவுரை	...	3
	மதிப்புரைகள்	...	5
1.	திராவிடத்தில் ஆரியம் செய்த தீவினை !	...	9
2.	சூத்திரன் கிளர்ச்சி செய்யாததேன் ?	...	12
3.	விதியும் பாவமும்	...	14
4.	காந்தீயம்	...	15
5.	பெரியார் ஈ. வெ. ரா. வீரமுழக்கம்	....	17
6.	விஞ்ஞானத்தின் விரோதிகள்	...	20
7.	ஐக்கியம்	...	22
8.	நிர்மூலம் ஆக்குவோம் அநீதியை	...	25

முகவுரை

நம் நாட்டில் நமது முன்னோர்களுடைய பண்டைப் பெருமைகளைக் குறித்துப்பேசி மகிழ்ச்சியடையும் மக்கள் மிகவும் மலிந்து காணப்படுகின்றனர். அவர்களில் இருவகை; ஒரு சாரார் புராணக் கூற்றுகளை ஆதாரமாகக் கொண்டுள்ளனர். மற்றொரு சாரார் சரித்திர ஆராய்ச்சிகளைச் சான்றாகக் கொண்டுள்ளனர்.

புராணப் பற்றுடன் பண்டைப் பெருமை பேசும் மக்கள் தம் முன்னோர்களை ஆரியத்தின் அடிமைகளாகப் படம் பிடித்துக் காட்டுவதைத்தான் உண்மையான சிறப்பொழுக்கம் என்று தவறுதலாகக் கருதியவர்களாவர். [அல்லது அப்படிக் கருதும்படி ஆரியர்கள் பாடங் கற்பித்திருக்கின்றனர் என்றுதான் கூறவேண்டும்.]

சரித்திர ஆராய்ச்சிகளைச், சான்றாகக்கொண்டு பண்டைப் பெருமை பேசும் மக்கள் மிகச் சிலரேதான் உள்ளனர். இவர்களும் ஆரியர்களின் பிடியிலிருந்து முற்றிலும் விலகியவர்களா யில்லை.

"**நான் திராவிடன்!** எனது நாடு திராவிட நாடு"! என்று பெருமையாகத் தலை நிமிர்ந்து கூறும் சரித்திர ஆசிரியர்களைக் கூடக் காண முடியாத துர்ப்பாக்கியமான நாடிது! இந்த நாட்டில் வாழும் மக்கள் தங்களுடைய சுயமரியாதையை இழந்ததுபோல் நாட்டுணர்ச்சியையும் இழந்து விட்டனர் என்று உணர்ந்து மனங் குமுறினார் ஈரோடு தந்த லெனின் பெரியார் ஈ. வெ. ராமசாமியவர்கள்.

கடந்த இருபது ஆண்டுகளாக நமது பெரியார் திராவிட நாட்டிற்காகச் செய்து வந்திருக்கிற இடைவிடாத தொண்டின் மகத்துவமே

இன்று உணர்ச்சி பெற்ற ஒவ்வொரு திராவிடன் நரம்புகளிலும் இன எழுச்சி ரீங்காரம் செய்து கொண்டோடும் இரத்தத்துடிப்பை உண்டாக்கியிருக்கிறது!

துடி துடிக்கிருன், தன்மானம் பறிபோனதை நினைந்து; இடி இடிக்கிருன் இன எழுச்சிப்பேரிகை முழங்க! ஆம்! திராவிடத்தின் தந்தை பெரியார் ஈ. வெ. ரா. பட்ட பாடுகள் வீண் போகவில்லை! நீண்டகால நித்திரையிலிருந்து திராவிடர்கள் விழிப் படைகிருர்கள்! இனி அவர்களை மீண்டும் நித்திரையில் ஆழ்த்திவிட யாராலும் முடியாது! எங்கெங்கு, எந்தெந்தக் கட்சியில் திராவிடர்கள் இருந்தாலும் சரி! அங்கங்கே, அந்தந்தக் கட்சியிலேயே, திராவிட இன உணர்ச்சி புத்துயிர் பெற்று வருவதைக் காண்கிரேம்.!

திராவிடத்தின் நான்கு பிரிவுகள் தமிழகமும், கேரளமும், ஆந்திரமும், கன்னடமுமாகும். அங்கெல்லாங்கூட இன எழுச்சிப் பேரிகை முழங்குவதை நன்கு கேட்கிரேம்! ஆம்! சிதைந்த திராவிட இனம் ஒன்றுகூடி ஓர் ஐக்கிய முன்னணிப்படை வகுசையை அமைக்க வேண்டும்! அதன் கடமைதான் ஐக்கியத் திராவிடக் குடியரசாட்சியைக் ,கொண்டுவருவது!

இந்தச் சிறந்த இலட்சியத்திற்காகவே நமது திராவிடத்தின் காரல் மார்க்ஸ், லெனின், ஸ்டாலினுமாகிய பெரியார் ஈ. வெ. ரா. பிறந்தார், வளர்ந்தார், வாழ்கிருர் என்று கூறினல் மிகையாகாது! இத்தகைய பெரியாரின் வலது கரமாய் விளங்கும் தளபதி C. N. அண்ணுதுரை M. A., அவர்கள் இப்புத்தகத்திற்கு மனமுவந்தளித்த மதிப்புரைக்காக எனது வணக்கமிகுந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன்; இப் புத்தகத்தைப் பார்வையிட்டுத் தந்தும், சங்கநாதம் ஒலித்தும் ஊக்கிய கிளி—இறையனுருக்கும், பல அலுவல்களுக்கிடையே குறித்த சொற்பகால அளவில் தவருது அச்சிட்டுதவிய செங்குந்த மித்திரன் அச்சகத்தாருக்கும், எனது மனமார்ந்த நன்றி உரியதாகுக.

இங்ஙனம்
"விவேகி"

மதிப்புரை

மறைக்கப்பட்டுப் போன பல சரித்திரப் பிரச்னைகள் இன்று ஆராய்ச்சிக் கூடத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இங்ஙில வரு மென்று பலர் எதிர் பார்க்க வில்லை. புதை பொருளைத் தோண்டி எடுத்துப் பழங்காலத்தைப் பற்றிய புது உண்மைகளைக் கண்டறியும் திணைத்தனத்தாரின் அலுவலகம் போல் இன்று மக்கள் மன்றம் பணி யாற்றுகின்றது.

"திராவிடமும்—ஆரியமும்" என்ற இச் சிறுஏடு இத்தகைய பணியி லொன்றாகும். ஆர்வமே இதற்கு உறு துணையாக அமைந்திருக் கிறது.

பாசி படர்ந்த குளத்திலே சிறிதளவு பாசியை எடுத்து விடுவதும் நன்றே என்ற முறையில் மக்கள் மனதிலே நிறம்பிக்கிடக்கும் பல கேடு தரும் கருத்துகளில் சிலவற்றையேனும் எடுத்தெறிய முற்படுவதும், அதிலே வெற்றி காண்பதும் பாராட்டுதலுக் குரியதே. 'விவேகி' எனும் நண்பர் இப்பணி புரிய முன் வந்தது கண்டு மகிழ்கிறேன்.

வரலாறு, இலக்கியம், சிற்பம் முதலிய எத்துணையோ ஆதாரங்கள் உள்ளன. திராவிட இனம் தனி இனம், என்பதனை விளக்க எனி னும் இன்று நாட்டு மக்களில் பலருக்கு இஃதோர் புதுமை என்றே தோன்றும். அந்த அளவுக்கு மூடுபனி படர்ந்திருக்கிறது. காலம் செய்த கொடுமை ஓரளவு இதற்கு எனில், கபடர்கள் செய்தவை மிகப் பெரிய அளவில் அமைந்து விட்டது. எனவேதான் இனத்தை மறந் தோர் எடுத்துரைக்கத் துணிவோரை ஏளனம் செய்வோர், உண்மை தான் எனினும் அது எற்றுக்குப் பயன்படும் என்று ஒதுக்கிடுவோர் ஆகிய பல வகையினர் நாட்டிலே மலிந்துள்ளனர்.

அறியாமை காரணமாக இங்கனம் கூறுவோர்பால் நாம் கோபிப்பதற் கில்லை. நாமே இதனை அறியாத காலம் இருந்த தல்லவா! நாம் இன்று அறிவதுபோல் நாளை அவர்கள் அறியக்கூடும். அதற்குத் தூண்டு கோலாக அமைவதே, ஏடு வெளியிடுவதன் நோக்கம்.

இந் நூலின்கண் ஆரியம் — திராவிடம் எனும் இரு சொற்கள் இரு இனங்களைக் குறிப்பன என்பதும், இரு விதமான பண்பாடுகளைக் குறிப்பன என்பதும் தெளிவாகத் தீட்டப் பட்டுள்ளன.

விடுதலை உணர்ச்சியும், விஞ்ஞானத்தில் ஆர்வமும் கொள்ள வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்திக் கூறியுள்ளார் ஆசிரியர். இந்த நோக்கத்துக்கு ஊறு தேடும் பழமையின் புத்துருவாக அமைந்துள்ள காந்தியத்தைக் கண்டித்து; அதனால் திராவிடம் அடையக் கூடிய கேடுகள் பல என்பதை எடுத்துக் காட்டி எச்சரித்து மிருக்கிறார்.

ஆரியம்—திராவிடம் என்று பேசித் திரிவது ஏனோ! இந்நாள் பிரச்னை இதுவோ? இதன் பயனாக விளையப் போவதுதான் யாதோ! என்று கேட்போருக்கு, நூல் எழுதிய நண்பர், தமது நோக்கத்தை நன்கு விளக்கிக் கூறியுள்ளார். நூலின் இறுதிக் கட்டத்தில்; **திராவிட ஐக்கியக் குடியரசு** அமைப்பதே எமது குறிக்கோள் என்று கூறுகிறார். இந்த மகத்தான நோக்கத்துக் குழைக்கும் தோழர்களுக் கெல்லாம், இந் நூல் மிக உதவியாக அமையும். தமிழகம் இதனால் பயன் பெறும் என்று நம்புகிறேன்.

நண்பரின் இந்த நன் முயற்சிக்குத் தக்க ஆதரவு காட்டித் திராவிட மக்கள், தமது இன்ப இலட்சியத்தைக் காணப் பணி புரிவர் என்று நம்புகிறேன். நண்பருக்கு என் பாராட்டுதல்.

C. N. அண்ணாதுரை

சிறப்புப் பா

தன்னைமறந் தேமாறல் வீரம் மிக்கார்
தமக்கழகோ குடியாட்சித் திராவிடா நீ
இன்றைநிலை யுணராமை யழிவுக் குள்ளே
இழுத்துவிடும் அறியாயோ இன்றுன் னாட்டில்
துன்னுபொருள் மனைமாட்சித் துணையாஞ் செல்வச்
சூழ்நிலைகண் டுரிமைகொள்ளத் துணிவாய் என்றே
மன்னுமெங்கள் 'விவேகி' யறம் முழங்கும் தீஞ்சொல்
வளங்கேட்டுப் பாட்டாளி மகிழ்கின் றூனே !

சங்க நாதம்!

அரசியல் பண்டம் மாற்ற
ஆரியர் கொண்ட சூழ்ச்சி
புரைபல வோடிற் றிந்நாள்
புரிந்தது அவர்கள் வேடம்;
சரியல தமிழா! மேலும்
தாழ்ந்திடா தெழுந்திப் போதே
உரியன தொடடா; பேயை
ஓட்டடா; ஊது சங்கே!!!

96, சாமி நாய்க்கன் தெரு,
சென்னை-2,
10—12—46

கிளி-இறையனார்.

நன்றி

இந்நூலின் முதற் பதிப்பாக வெளியிடப்பட்ட இரண்டாயிரம் பிரதிகளையும் இரண்டே வாரங்களுக்குள் ஏற்று எம்மை ஊக்கிய எம தருமைத் திராவிட மக்களே! உங்களெல்லோருக்கும் எமது மனமார்ந்த வணக்கத்துடன் கூடிய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இரண்டாவது பதிப்பிற்குக் குறைந்தது ஐயாயிரம் பிரதிகள் தேவைப்படும் என்று அறிந்தும், வேறு பல வெளியீடுகள், "கனவில் கண்ட கவி," "ஐக்கிய திராவிடம்" முதலியவைகளும் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து பதிப்பிக்கவேண்டியிருப்பதால், இந்நூலில் மூவாயிரம் பிரதிகள் மட்டுமே மறுபதிப்பாக வெளியிட்டிருக்கும் எங்கள் மீது அன்பு கூர்ந்து ஆதரவளிக்கக் கோருகிறோம்.

இன எழுச்சியுற்றுத் திகழும் திராவிடத் தோழர்காள்! நீங்கள் எமது முயற்சிக்கு ஆரம்பத்திலிருந்தே பேராதரவளித்து ஊக்கியமைக்காக மீண்டும் எங்கள், வணக்கமும் நன்றியும் உரித்தாகுக.

இங்ஙனம்

திராவிட கலா நிலையத்தார்

திராவிடமும் ஆரியமும்

1. திராவிடத்தில் ஆரியம் செய்த தீவினை

வடக்கே விந்திய மலையும் தெற்கே கன்னியா குமரியும் மேற்கே அராபிக் கடலும் கிழக்கே வங்காளகுடாக் கடலும் நான்கு எல்லைகளாகக் கொண்டுள்ள தேசத்தின் பெயர்தான் "**திராவிடம்;**" இந்த நான்கு எல்லைகளுக்குள் வாழும் பிறப்புரிமை பெற்ற மக்களுக்குத்தான் திராவிடர்கள் என்று பெயர், இது சரித்திரப் பிரசித்தி பெற்ற உண்மையாகும்.

இன்று நாம் காண்பது சிதைந்த திராவிடம். இது தானே சிதைந்து விடவில்லை, இயற்கையும் இதைச் சிதைத்துச் சின்னு பின்னப் படுத்திவிடவில்லை, ஆனால் சிதைக்கப் பட்டிருக்கிறது! சிதைத்தது யார்! ஏன்? எப்படி? என்பதுதான் சிந்திக்க வேண்டிய விஷயம்!

திராவிடம் சிதைந்து சீரழிந்தது ஆரியர் வருகையைத் திராவிட மன்னர்கள் ஏற்றுக்கொண்டதனல்! ஆரியம் பகுத்தறிவுக்கு விரோதம்! பகுத்தறிவு முடியாட்சிக்கு விரோதம்! முடியாட்சியோ குடியரசுக்கு விரோதம், இந்த உண்மைகளை உணருந்தோறும், ஆரியர்களை வரவேற்று ராஜ குருக்களாக்கிக் கொண்ட திராவிட மன்னர்களின் எண்ணம் நமக்கு விளங்குவது எளிதே.

பதினெட்டாம் நூற்றுண்டில் ஐரோப்பா வெங்கும் பகுத்தறிவுப் பிரச்சாரம் வெகு விமரிசையாக நடைபெறத் தொடங்கிவிட்டது. ஆனால்; அதற்கு வெகு காலத்திற்கு முன்பிருந்து பகுத்தறிவுக் கொள்கையை அனுசரித்துச் சிறப்போடு வாழ்ந்துவந்த திராவிடர்கள், ஆரியர்கள் வருகைக்குப் பிறகே மெல்ல மெல்ல மூடக் கொள்கைகளை ஏற்று மடங்களையும் மடாலயங்களையும் கட்டுவதிலும் தேர் திருவிழா முதலிய களியாட்டங்கள் புரிவதிலும் ஈடுபட்டு விட்டனர். திராவிடத்தின் புத்திமான்களெல்லோரும் ஆரியம் தந்த போதையில் மயங்கி மதியிழந்து மூடப் பக்தி மான்களாயினர் !

திராவிட மக்கள் பகுத்தறிவு அற்றவர்களாக ஆக்கப் பட்டனர், நாளடைவில் ஆரியர்களுடைய குருட்டு நம்பிக்கை களிலும் பொருளற்ற ஆசாரங்களிலும் பழக்க வழக்கங் களிலும் ஆழ்த்தப்பட்டனர்.

மன்னர் தெய்வாம்சம் பெற்றவரென்றும், ராஜ குருக் களாகிய ஆரியப் பூசாரிகள் தெய்வத்தின் பிரதிநிதிகள் என்றும், மக்களில் நான்கு சாதிப் பிரிவுகள் தெய்வத்தினுல் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்றும், பிராமணர்கள் (ஆரியர்கள்) சுகபோக வாழ்வு வாழவும், சத்திரியர்கள் ஆளவும், வைசியர்கள் முதலாளிகளாகவும், சூத்திரர்கள் கீழ்ப்படிதலுள்ள ஊழியர்களாகவும் இருக்கவேண்டும் என்று வெளியிலிருந்து வந்த ஆரியன் திராவிடர்களுக்குத் திட்டம் வகுத்தான். திராவிட மன்னனும் அதை ஏற்றுக் கொண்டான்! ஏன் ? ஆம், அவனுக்கு ஆளும் தொழிலே கொடுக்கப்பட்டிருக்கிறது ! அது மாத்திரமல்ல, மக்களில் பெரும்பகுதியினராகிய சூத்திரர்களை அடங்கி ஒடுங்கிக்கீழ்ப்

படிந்து கிடக்கும்படியும், கல்வி, கேள்வி யற்றுப் பாமரராய்ப் பொறுமையுடன் காலமெல்லாம் ஊழியஞ் செய்து கொண்டிருக்கவும் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது! பொதுவாக மன்னர்கள் விரும்புவது இது தானே! அவனுடைய எதேச்சாதிகாரத்தை எதிர்க்கும் சக்தி அவன் ஆளும் குடிஜனங்களிடம் இருப்பதை அவன் சகிக்க மாட்டான்! ஆனால், குடி ஜனங்கள் எதிர்த்தால் மன்னன் நிலைமை திண்டாட்டமே! போலி கௌரவங்களுக்காகவும், சுய நலத்திற்காகவும் எதேச்சாதிகாரத்துடன் ஒருவருக் கொருவர் பொறாமை கொண்ட திராவிட மன்னர்கள், ஆரியர் நய வஞ்சனைகளுக்காளாகி எத்தனையோ சகோதர யுத்தங்கள் புரிந்து நாசமாகியு மிருக்கின்றனர்.

ஆரிய மனு நீதி சாஸ்திரத்தைச் சட்டமாக ஏற்று ஆட்சி புரியும் அரசாங்கம் ஒரு புறமும், அவர்களது முழு ஆதரவும் பெற்று அவர்களைச் சார்ந்து நிற்கும் ஆரியப் புரோகிதப் பூசாரிகளும், ரிஷிகளும் மற்றொரு புறமும் மக்களிடையே அறிவையும் கிளர்ச்சியையும் உண்டாக்கக் கூடிய உயரிய கருத்துக்கள் பரவாமல் இருக்கும்பொருட்டுப் பண்டைய பகுத்தறிவு நூல்களைக் கொளுத்தியும், பதி னெட்டாம் பெருக்கு ஆற்று வெள்ளத்தில் போட்டும், புத்தி புகட்ட வந்த புத்தன் போன்ற அறிவாளிகளைக் கூட விரட்டி யோட்டியும் அடக்கு முறைகள் பலவற்றைக் கை யாளும்போது சாதாரணமாய்த் தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் மக்களிடையே தம் நிலையின் மீது ஒருவித அதிருப்தியும், விடுதலை மீது ஓர் ஆர்வமும் எப்படி ஏற்பட முடியும்? மக்கள் இத்தகைய நிலையில் ஆழ்த்தப் பட்டுள்ள வரையில் மன்னன் எதேச் சாதிகார ஆட்சி நடத்தலாம் அல்லவா?

அவன் விருப்பம் போல் வாழலாம்! மக்களைப் பற்றிய கவலை இல்லை! அவன் மக்களுக்குச் செய்த தெல்லாம் பெரிய பெரிய கற்றூண்களாலும் கோபுரங்களாலும் நிரப்பப் பட்டகோவில்களும், குளங்களுமேதான்! மக்கள் மன்னனைப் போற்ற அவ்வளவே போதுமானதாக யிருந்தது, அந்த நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டனர் திராவிட மக்களை ஆரியர்கள்!

2. சூத்திரன் கிளர்ச்சி செய்யாத தேன்?

திராவிட மன்னன் ஆரியன் திட்டங்களை அங்கீகரித்துக் கொண்டது போலவே வைசியனாகிய முதலாளியும் அந்தத் திட்டங்களை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டிருக்கிறான். ஒரு சிறு கூட்டத்தைப் பிறவி முதலாளிகளாக ஆக்கிய தன்மை மனு நீதி தர்ம சாஸ்திரத்திற்குத்தான் உண்டு. முதலாளித் துவத்தின் அசைக்க முடியாத அடிப் படையை ஆரியன் மனு நீதி தர்ம சாஸ்திரத்தின் மூலம் ஆக்கித் தந்தால் அதை வரவேற்க எந்த வைசியன் (முதலாளி) மறுப்பான்?

கடைசியாகப் பெருங்குடி மக்களாகிய சூத்திரன் ஆரியன் திட்டங்களை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யவில்லையே ஏன்? இங்குத்தான் அறிவாளிகள் தங்கள் அறிவை மிகவும் கூர்மையாக்கிக் கொண்டு ஆராய்ந்து ஒரு நல்ல தீர்ப்புக்கு வரவேண்டும்! திராவிடத்தின் உயிர்நாடி போன்ற உழைப்பாளி, ஆரிய மனு நீதி தர்ம சாஸ்திரத்தின் பேரால் சூத்திரன் என்று ஒதுக்கப்பட்டான்! காரணம்

என்ன? மத்திய ஆசியாவில் ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டு நாடோடியாகத் திரிந்த கூட்டம், சிந்து நதிச் சம வெளியிலே கூடாரம் அடித்துக் குடியேறிய கும்பல், விந்திய மலையைத் தாண்டித் திராவிட நாட்டில் புகுந்ததும் உழைக்காமல் சுகபோக வாழ்வு வாழ்வதற்காகச் சூழ்ச்சி செய்து தயாரித்த திட்டம், மனு நீதி தர்ம சாஸ்திரம்!

இதைத் திராவிட மன்னன் தனது அரசாங்கச் சட்ட மாக அங்கீகரித்துக் கொண்டான் ஏதேச் சாதிகாரம் புரி வதற்காக என்று கூறலாம்!

வைசியனும் வரவேற்றுக் கொண்டான் முதலாளித்துவ ஆதிக்கம் பெறலாம் என்ற ஆவலினுல்!

ஆனுல், சூத்திரன் ஏன் ஒத்துக் கீழ்படிந்து போனுன்? இதற்கு விடை இதோ கிடைக்கிறது! ஆனுல் பரிகாரம் தேட மறந்தும் மறுத்துவிடாதீர்கள்!

ஆரியன் சூத்திரனைச் சூழ்ச்சியால் வீழ்ச்சியுறச் செய்தான் சூத்திரனுடைய அறிவு ஆரியனுடைய சூழ்ச்சி யால் முற்றுகை யிடப்பட்டது! சூதுவாதறியாச் சூத்திரன் ஆரியன் விரித்த நய வஞ்சக வலையில் சிக்கிக் கொண்டான் திராவிட மன்னனும், வைசியனும் ஆரியன் வலையில் விழுந்து வழிகாட்டினர் சூத்திரனுக்கு! ஆனுல், மன்னனும் வைசி யனும் தற்காலிகமாகவேனும், ஏகாதிபத்தியமும், முத லாளித்துவமும் பலனைப் பெற்றனர்! சூத்திரன் பெற்ற பலன் என்ன? முழு மூட நம்பிக்கைகளே தான்! ஆம், இம் மண்ணுலகில் உண்டான துன்பங்களையும், இழிவு களையும் சூத்திரன் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டு

தாழ்மையுடன் ஊழியம் செய்யவேண்டும்! அப்படிச் செய்தால்தான் அவன் வானுலகிலேனும் இன்பமான சுவர்க்க வாழ்வு வாழலாம்! இல்லாவிட்டால், மண்ணுலகில் மன்னனுடைய கடுமையான தண்டனைக்கும், வானுலகில் கடவுளுடைய நித்திய நரக வேதனைக்கும் தப்பவே முடியாது என்று உபதேசிக்கப்பட்டனர். அத்தகைய ஆரிய உபதேசங்களை எல்லாம் ஆதித்திராவிடன் (சூத்திரன்) அறிவீனத்தால் தர்மோபதேசங்கள், அறவுரைகள் என்று நம்பி விட்டான், நம்பும்படிப் பக்குவப்படுத்தப் பட்டான் என்றால் இது மிகவும் சரியான வார்த்தையாகும்!

3. விதியும் பாவமும்

பிறகு படிப்படியாகப் பல புதிய புதிய மூடக் கொள்கைகள் கற்பனை செய்யப் பட்டுப் புகுத்தப்பட்டன. "விதி" என்ற ஒரு வார்த்தை, இரண்டே எழுத்து, அது ஆரியர்களுக்காகச் செய்த வேலை இவ்வளவுதான் என்று கூறிவிட எவரால் முடியும்? அந்தோ! பாமரர்களாக்கப் பட்ட திராவிடப் பெருங்குடி மக்களாகிய பேருழைப்பாளிகளுக்கு மட்டுந்தான்! ஆரியர்களுக்கல்ல! உள்ளத்தை ஒடுக்கும் வேட்டு, உதட்டை அசைக்க முடியாத பூட்டு, கைகால்களுக்கு உடைக்க முடியாத விலங்கு, முன்னேற்றம் காணமுடியாத முகமூடி, இன்னும் எண்ணற்ற கண்மூடிப் பழக்கங்களுக்கெல்லாம் காரணமாய் விளங்கிற்று அந்த விதி மீது அவர்கள் வைத்த நம்பிக்கை! அடுத்தது பாவம்; இந்தப் பாழும் பாவத்தின் மீது அவர்களுக்கிருந்த மூட நம்பிக்கையினால்தான் பசுவும் பார்ப்பனனும் (ஆரியனும்) தற்காப்புக் குரியவராயினர்! மேலும், பாவியாகிய சூத்திரன் பார்ப்பனனின் காலைக் கழுவிய தண்ணீரைப் பருகிப்

பாவத்தை அகற்றிக் கொள்வதைப் போல் பசுவின் சாணி, மூத்திரம் முதலிய ஐந்து வகையையும் அருந்திப் பாவத்தை அகற்றிக் கொள்ளலாம் என்றும் இயற்றினர் சட்டம். இது மட்டுமா? கடுமையான உழைப்பு, கொடுமையான வியாதி, தாங்க முடியாத கஷ்ட நிஷ்டூரங்கள், எல்லா வற்றையும், அவன் ஒரு பாவி என்று தன்னைத் தானே எண்ணிக் கொண்டு பாவ கர்மத்தால் விளைந்ததை அனுபவித்துத்தான் தீரவேண்டும் என்று கருதிப் பரிகார மற்றுத் தவித்தான், ஆனால், பாவ விமோசனத்திற்காகப் பல பல சிலைகளுக்கு முன் மண்டியிட்டுக் கெஞ்சி மன்றாடிக் கும்பிடுகள் போட்டனர், கூத்தடித்தனர், குப்புற விழுந்து அழுது புரண்டனர், குடுமி வளர்த்தனர், மொட்டை அடித்தனர், பலிகள் பல கொடுத்தனர், நோன்புக ளிருந்தனர், சமயம் விட்டுச் சமயம் சென்றனர், மதம் விட்டு மதம் மாறினர், மதத்தோடு மதம் மோதினர், மண்டைகளை உடைத்துக் கொண்டனர், கழுவேற்றினர், சித்திரவதை களும் செய்துகொண்டனர்! யார்? யாருக்குள்! ஆரியர் களுக்குள் அல்ல! ஆனால், ஆரியர் இயற்றிய மூடச்சாஸ்திரத் தின் பேரால்!! திராவிடர்களுக்குள்!!! ஏன்? என்பது இதுகாரும் விளங்கியிருக்கும்! இனி, இன்று நடப்பது என்ன வென்று கவனிப்போம்!

4. காந்தியம்

ஆரியரின் மனு நீதி தர்ம சாஸ்திரத்தைப் பகுத்தறி விழந்த திராவிட மன்னன் ஏகாதிபத்திய ஆவலினால் சட்ட மாக ஒப்புக் கொண்டு திராவிட மக்களில் ஒரு பெரும் பகுதியைச் சூத்திரப்பட்டம் சூட்டித்தாழ்த்தி விட்டான்; பிறகு, ஆரியம் தன் சுய வடிவத்தைக் காட்டும்போது

மன்னனும் வைசியனும் ஆரியர் அடிவருடிக் கொண்டு இருந்தனர். அந்தச் சமயம் போல் ஏற்றசமயம் வேறுண்டோ அன்னியர் படை எடுப்புக்கு? கடைசியாகத் திராவிடம் ஆங்கிலேயர் வசமாகி இந்திய உப கண்டத்துடன் இணைக்கப் பட்டிருக்கிறது! திராவிடம் ஆரியர்களை வரவேற்று மனு நீதி தர்ம சாஸ்திரத்தின்படி ஆட்சி செய்ததின் பலன் இது தான்!

ஆங்கிலேயருடைய ஏகாதிபத்தியம் இந்திய உப கண்டத்தில் வேரூன்றுவதற்காக அவர்கள் செய்த பெரும் முயற்சியின் பயனாய் இந்திய உபகண்டம்! ஒரே சமுதாயத்தையுடைய ஒரு தேசம் போல் சித்திரித்துக் காட்டப் பட்டது. திராவிடம், திராவிடர்கள் என்ற பெயரும், பிரச்சினையும் மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருந்தது. இந்தச் சமயத்தில்தான் காந்தீயம் தலை விரித்தாடத் தொடங்கிற்று. இந்தியாவின் சுதந்திரத்தைப் பற்றிப் பேசியவர்களுள் காந்தியாரும் ஒருவர் என்றாலும்; மற்றச் சுதந்திரத் தலைவர்களுக்கும் காந்தியாருக்கும் பெரிய வித்தியாசம் ஏற்பட்டு விட்டது. அதனால், சுதந்திரப் போராட்டத்திற்குக் காந்தியார் தலைமைதாங்கத் தகுதி அற்றவரானார். காங்கிரஸின் தலைமைப் பதவியை இழந்த காந்தியார் ஆத்மார்த்திக வாழ்க்கை என்னும் ஓர் வழியில் வாழ்நாளைக் கடத்துகிறார். ஆனால், அதே சமயத்தில் அவர் அனுஷ்டிக்கும் வழியில் அவருக்கு மக்களிடையே ஏற்படும் செல்வாக்கைத் துணையாகக் கொண்டு, அரசியல் கட்சிகளில் ஒன்றாகிய காங்கிரஸ் மீதும் சர்வாதிகாரம் புரிகிறார். ஒன்றுக்கொன்று நேர்மாற்றமான இரண்டு வழிகளில் ஏக காலத்தில் பிரயாணப் படுவதாக எண்ணிக் கொண்டு காலை அகட்டியபடி நின்ற நிலையிலேயே நிற்கும்

காந்தியார் கொள்கைக்குக் காந்தீயம் என்று பெயர். இந்தக் காந்தீயம் அந்த ஆரியம் ஈன்ற குட்டியேதான்! தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாரடி பாய்கிறது.

5. பெரியார் ஈ. வெ. ரா. வீர முழக்கம்

இந்த உண்மையை முதன் முதல் உணர்ந்ததும், திராவிட மன்னர்களாலும் திடமுடன் வெளியேற முடியாத ஆரியத்தினும் கொடிய காந்தீயப் பிடியிலிருந்துத் தீரமுடன் வெளியேறித் தீவிர பிரச்சாரம் செய்து திராவிட மக்களுக்கு விழிப் பூட்டும் வீரப் பணிபுரிந்த பெருமை திராவிட நாட்டின் முடிசூடா மன்னர் பெரியார் ஈ. வெ. ராமசாமியவர்களுக்கே உரியது!

பிறப்புரிமை சொத்துரிமை முதலிய பல விதமான உரிமைகளால் மற்ற மக்கள் எல்லாரையும் புறக்கணித்து விட்டு மேன்மையுடன் விளங்கும் பல வகுப்பினர்களை விடக் கடவுள் உரிமை பெற்றதாகக் கூறிக் கொள்ளும் வகுப்பினர்களால் திராவிடப் பொது மக்களுக்கு விளைந்துள்ள தீங்குகள் அளவு கடந்தது. காந்தீயமும் அத்தகையதே. ஏனெனில் காந்தியார் பெயரளவில் தீண்டாமை ஒழிப்புக் கூக்குரலிட்டாலும் உண்மையில் அவர் வர்ணாச்சிரம தர்மக் கொள்கையை ஒழிக்க விரும்பாததோடு பண்டைய மூடப் பழக்க வழக்கங்களுக்குச் செயலளவில் மதிப்புக் கொடுத்துக் கொண்டும் வருகிறார். தாழ்த்தப்பட்ட மக்களை ஏமாற்றுவதற்காகவே காந்தியார் அவர்களுக்கு 'ஹரிஜன்' என்ற பெயர் சூட்டியிருக்கிறார்.

மேலும் ஆதிகாலத்து வாழ்க்கை முறைகளையே எக் காலத்திலும் அனுஷ்டிக்குமாறு வற்புறுத்திப் பிரச்சாரம் செய்கிறார், காலதேச வர்த்தமானங்களுக்குத் தகுந்த முற் போக்கான மாறுதலையும், விஞ்ஞான ரீதியான மாந்தர் நடவடிக்கைகளையும் முற்றிலும் எதிர்த்து நிற்கிறார். அதி லும் அவருடைய விஷமத்தனமான கொள்கைகளின் விஷப் பரீட்சைகளை எல்லாம் திராவிட நாட்டில்தான் நடத்திப் பார்க்க விரும்புகிறார்! வட நாட்டில் அவருடைய சமூகத் தில் அவருக்கு எவ்வளவு செல்வாக்கிருந்த போதிலும் காந்தீயத்தை அங்கீகரித்து அமுலுக்குக் கொண்டு வர அவரை மகாத்மா வென்று நம்பும் அல்லது பிரச்சாரம் செய்யும் தோழர்கள்கூடத் துணிவதில்லை! சீடர்களுங் கூட அந்த காட்டுமிராண்டித் தனமான கொள்கைகளுக்குப் பணிவதில்லை! உதாரணமாக, காந்தியார் விரும்பும் மில் ஒழிப்புத் திட்டத்தை அவருடைய சீடர்களும் தோழர் களும் அறவே புறக்கணித்து விட்டனர்!

ஆனால், அந்த மூடத்தனமான கொள்கையை, ஆரியத்தின் பரம்பரை காந்தீயத்தின் பேரால் திராவிட நாட்டில் திணித்து விடுவதற்கு வேண்டிய தீவிரப் பிரயத் தனங்களை ஆட்சியின் பீடத்தில் அமர்ந்து கொண்டு செய்து வருகிறது.

இன்று திராவிட நாட்டில் ஆரியத்தை ஆட்சி பீடத்தில் ஏற்றியவர்கள் யார்? அன்று ஏகாதிபத்திய வெறியால் ஆரியத்திற்கு அடிமையான திராவிட மன்னர் களின் சந்ததியில் வந்து, இன்று சுதந்திர வெறியால் கண் மூடித்தனமாகக் காந்தீயத்தைப் பின்பற்றும் காங்கிரஸ் திராவிடர்களே யாவர். காங்கிரஸ் திராவிடர்களே! நீங்கள்

பூரணமாக விழிப்படைய வேண்டும்! உங்கள் நாட்டின் எல்லைகளை மீண்டும் பலப்படுத்த வேண்டும்! உங்கள் உண்மையான மாறுதல்களையும், உடனடியான தேவை களையும் நீங்கள் கூர்ந்து நோக்கி உணரவேண்டும்!

இந்திய உபகண்டத்திற்குச் சுதந்திர காலம் நெருங்கி விட்டது என்று நாம் நம்புவோம்! ஆனால், அது காந்தீ யத்தால் அல்ல என்பதை நீங்கள் தீவிரமாக ஆராய்ந்த பிறகு அங்கீகரிக்கும்படி நேரிடும்! காந்தீயம் இந்தியாவின் சுதந்திர கால அளவைக் கணிக்க முடியாத தூரத்திற்கப்பால் வீசி எறிந்து விட்டது. இரண்டாவது உலக மகா யுத்தம் உண்டாகி யிருக்காவிட்டால், இந்திய உபகண்டத்தின் சுதந்திரப் பிரச்சினைகள் வெறுங் காந்தீயக் கதா காலச் சேபங்கள் அளவில்தா னிருந்திருக்கும்!

இன்றும் பல இலட்சக் கணக்கான மக்கள் காந்தீ யத்தைப் பின்பற்றிப் பிரார்த்தனை மூலம், கைராட்டை மூல மெல்லாம் சுதந்திரம் பெற்றுவிடலாம் என்றும் நம்பு கிறார்கள். கடவுளருளால் சுதந்திரத்தைப் பாதுகாத்து விடலாம் என்றும், அஹிம்ஸா தத்துவத்தின் மூலமே யுத்தம் வராமல் தடுத்து விடலாம் என்றும், காந்தியார் அபிப்பிராயப்படுவதை ஒப்புக் கொள்ள முடியாத காந்தி பக்தர்கள் அதை மறுத்துக் கூறவும் தயங்குகிறார்கள்! காந்தியார் அந்தராத்மா என்ற ஒரு தெய்வீகத்தோடு சம்பந்தம் வைத்துக் கொண்டிருப்பதாக ஒப்புக் கொள்கிற வர்கள், காந்தியாருக்கு நோய்களும், துன்பங்களும் வரும் போது ஆங்கில விஞ்ஞான வைத்திய முறைகள் கையாளப் படுவது கண்டு கொஞ்சங்கூட ஆச்சரியப்படுகிறார்களில்லை! மேலும், காந்தியார் தினந்தோறும் ஒரேமாதிரி பிரார்த்தனை

புரிந்துகொண்டே யிருக்கிறார், அந்தராத்துமாவைக் கண்டு அடிக்கடி பேசுகிறார், ஆனால், பாரத மாதாவோ, பரங்கியோ, எதற்கும் இணங்கி வரக்காணோமே? எல்லாம், இரச வாதம் செய்வதாக ஏமாற்று வித்தை நடத்திய கபட சன்னியாசிகளின் கதைதானே இதுவும்! என்று நினைப்ப வர்கள் கூட நிமிர்ந்து கேட்கக் கூசுவானேன்? காங்கிரஸ் திராவிடா! கபட நாடக சூத்திரதாரிகளின் கைப்பாவை யாக இருந்தது போதும்! சற்றே நிமிர்! பகுத்தறிவு கொண்டு நினைந்துபார்! விஞ்ஞானத்தை வெறுக்கும் காந்தீயம் வடநாட்டில் விலையாயிற்று?

6. விஞ்ஞானத்தின் விரோதிகள்

திராவிட நாட்டின் ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ள ஆரியர் வட நாட்டில் விலையாகாத காந்தீயத்தை இங்கு இறக்குமதி செய்வதன் கருத்தென்ன? திராவிட நாட்டில் விஞ்ஞானம் வளர்ந்தால், ஆரியர் குடி போவதற்கு வேறு இடமில்லை! விஞ்ஞானத்தின் விரோதிகள் ஆரியம்! அறியாமை!! காந்தீயம்!!! ஆம். ஆரியம், பிரார்த்தனை முதலிய மூடச் சடங்குகளை ஒரு தொழிலாகவும், வர்த்தக மாகவும், வயிற்றுப் பிழைப்புக்குரிய மார்க்கமாகவும் கை யாளுகிறது. காந்தீயமும் அதே பிரார்த்தனையைக் கையாளு வதன் மூலம் மக்களை மடமையுள் ஆழ்த்தும் ஒருவர் மகாத்மாவாக விளங்கப் பயன் படுகிறது! ஆனால், விஞ் ஞானத்தின் உண்மையான நோக்கம் அறிவை வளர்ப்பதே, விஞ்ஞான உண்மைகள்பல மத உண்மைகளுக்கு முற்றிலும் முரணாகவே யிருக்கின்றன; எனினும் விஞ்ஞானிகள் அதைப் பொருட் படுத்துவதில்லை, மதத்தை ஒழிப்பதற்காக விஞ்

ஞானிகள் விஞ்ஞானத்தை வெளிப் படுத்தவில்லை! ஆனால் உண்மை வெளியாகவும் பொய் மதிப்பிழந்து மறைகிறது! இது விஞ்ஞான ஆராய்ச்சியால் கிடைத்த இரண்டாவது பலன்; முதலாவது அவர்கள் கோரிய பலன் பகுத்தறிவு வளர்ச்சியே! சாதாரண விஞ்ஞான உண்மைகளுங்கூட மதத்துக்கு விரோதமாகவே இருக்கின்றன. எனவே, மதத்தை ஒழிக்க விஞ்ஞானிகள் முயல்வதாகச் சாமானியரும் முடிவு கட்டிவிடுகின்றனர்! விஞ்ஞானிகளோ கடுமையான உழைப்பாளிகள்; கருமமே கண்ணாயினர், காலத்தின் அருமையை அவர்கள் நன்கு அறிவார்கள், தம் கடமைகளை அவர்கள் நன்கு உணர்ந்தவர்கள், அவர்கள் ஆராய்ச்சியில் மதவிரோதமான பல உண்மைகள் வெளியானால், மதத்திற்குப் பயந்து கொண்டு அவ்வுண்மைகளை மறைக்கவே மாட்டார்கள்; தம் உயிர்களைத் தத்தம் செய்தேனும் உண்மையை நிரூபித்து நிலை நாட்டி விட்டார்கள்! ஆனால் மதத்தின் பெயரால் மதிப்பு வாய்ந்த மகாத்துமாக்கள் பீதியடைந்தனர்; மூடர்கள் நடு நடுங்குகிறார்கள், நடுங்கும் மூடர்களுக்குத்தான் பீதியடைந்த மகாத்துமா மீண்டும் உபதேசம் செய்கிறார்! விஞ்ஞானமே பொய்யானது என்றல்ல! வேறு எப்படி? ஆம்! இதுவும் ஒரு சூழ்ச்சியே தான்! விஞ்ஞான அறிவு வளர்ச்சியினால் மக்கள் அழிவுறுகின்றனர்! இயந்திரப் பெருக்கத்தினால் பாட்டாளி மக்கள் வேலை இல்லாத் திண்டாட்டத்தை அனுபவிக்கின்றனர் என்று பூச்சாண்டி காட்டுகிறது காந்தீயம்! இதற்கு நாம் அளிக்கும் விடை மிகவும் தெளிவானது: ரஷியாவைப்பார்! என்பதேதான், முதலாளித்துவமும், வேலை இல்லாத் திண்டாட்டமும் அங்கு அறவே இல்லை. ஆனால் ரஷியா ஒவ்வொரு துறையிலும் விஞ்ஞான மயமாகவே

விளங்குகிறது! இந்திய அரசாங்கத்தின் சுதேச சர்கார் முதன் முதல் சாதிக்க வேண்டிய வேலை இதுதான். இந்திய உபகண்டம் முழுதும் விஞ்ஞான மயமாக விளங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அதிகத் துரிதமாகக் கையாள வேண்டும்! அதே சமயத்தில் அவைகளின் நிர்வாக சக்திகளை அரசாங்கம் தன் கையிலேயே கெட்டியாக வைத்துக் கொள்ளவேண்டும்! அப்பொழுது வேலை இல்லாத் திண்டாட்டத்தோடு, முதலாளித்துவமும், முழு மூடத் தனங்களுங் கூடச்சேர்ந்து அடியோடு மறைந்துவிடும்!

7. ஐக்கியம்

ஐரோப்பாக் கண்டத்தைப்போல் இந்திய உபகண்டமும் வலிமை மிக்க வல்லரசுகள் வாய்ந்து விளங்க வேண்டுமேயானல், இந்திய உபகண்டமும் ஐரோப்பாக் கண்டத்தைப்போல் தனித் தனியாகப் பிரிந்த இன அரசுகளை அமைத்துக் கொள்ளத் தீவிரப் பிரயத்தனங்கள், தியாகங்கள், போராட்டங்கள் பல பல புரியவேண்டும்! இதை உணர்ந்தே இந்திய உபகண்டத்தின் இனத்தலைவர்களாகிய பெரியார் ஈ. வெ. ராமசாமியவர்களும், காயிதே அஃஜம் ஜனப் ஜின்ன அவர்களும் தத்தம் இன மக்களை ஒன்று திரட்டி ஐக்கிய முன்னணி அமைத்திருக்கின்றனர்! இனி, அவர்களுடைய போராட்டங்கள் வலிமை மிக்கதாய் விளங்கும்; எத்தகைய தியாகங்களையும் வியக்கத்தக்க தீரமுடன் செய்யத் தயாராக உள்ள இன எழுச்சி மிக்க வாலிபத் தொண்டர்கள் திராவிட நாட்டிலும்; பாக்கிஸ்தானிலும் தலைவர்களின் உத்திரவுகளுக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றனர்! பிரிட்டானியமும், காந்தியமும் சுதந்திர இன அரசுகளுக்கு விரோதமாக இருக்கிற வரை

யில் இந்திய உப கண்டத்தில் இனப் போர் மூளாதென்று எவராலும் கூற முடியாது!

போராட்டத்தில், இன எழிச்சியுற்றுக் கிளர்ச்சி செய்யும் மக்களே நிச்சயமாக வெற்றியுறுவர். பல இன மக்களை ஒரு பட்டியில் அடைத்து ஆதிக்கம் செலுத்த முடியும் என்று கனவு காண்பவர்கள் நிச்சயம் தோற்றுப் போவர். இது சரித்திரம் கற்பிக்கும் உண்மை!

ஆகவே, காங்கிரஸ் திராவிடர்களே! கொஞ்சம் கண் விழித்துக் கவனத்தோடு, அரசியல் சூதாட்டத்தின் போது காய்களை நகர்த்துங்கள். வெறும் மயக்கச் சுலோகங்கள் தாரக மந்திரம் என்று உபதேசிக்கப் படுகின்றன. அதில் மயங்கி விழுந்து விடாதீர்கள்! தேசியம் என்ற போதையைப் பருகி மெய் மறந்திருக்கும் போது திராவிட நாட்டின் அடிமைச் சீட்டு உங்களிடம் காட்டப்படும், அதில் உங்கள் கை ஒப்பங்களை வைத்து விடாதீர்கள்! என்று எதிர் காலத் திராவிட ஐக்கிய குடியரசின் சார்பாக இங்கு நான் உங்களை எச்சரிக்கை செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்! இந்திய உபகண்டத்தில் இனப் போர் முரசு கொட்டும் சத்தம் தெளிவாகக் கேட்டுக்கொண்டிருக்கிறது, இன்று, காதுகளை மூடிக் கொண்டு கவனமற்றிருப்பவர்கள்; அன்று, எப்படியும் நம்மைக் களத்தில் சந்திப்பார்கள்! போர் முடிந்ததும், திராவிட ஐக்கியக் குடியரசின் வெற்றிக் கொடி திராவிட நாட்டின் தலை நகரில் கெம்பீரமாகப் பறந்து கொண்டிருக்கும்! வீரப் பணியாற்றிய திராவிடத் தொண்டர்களை (அல்ல! அப்பொழுது அவர்களைத் திராவிடத்தின் இணையற்ற இராணுவ வீரர்கள்! என்று) அழைத்துத் தலைவர்

களும், தளபதிகளும், அவ்வீராங்கனைகளுக்கு வீரப் பதக்கங்களும், வெற்றி மாலைகளும் சூட்டுவர்! திராவிட நாட்டின் விடுதலைப் போரிட்டுத் தியாகமாகிய தியாகிகளுக்கு வணக்கம் செலுத்துவர், ஞாபகச் சின்னங்களும், அழகிய முறையில் அமைத்து வைப்பர்!

பிறகு தொடங்கும் திராவிட ஐக்கியக் குடியரசு மகா நாட்டில், தமிழகம், ஆந்திரம், கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய பகுதிகளிலிருந்து வந்துள்ள பிரதி நிதிகள் ஒன்று கூடிக் கலந்தாலோசித்து அரசியல் பிரதி நிதித்துவம் வாய்ந்த சுய நிர்ணயமான தனித்தனி சட்ட சபைகளை அவ்வப் பகுதிகளில் அமைத்துக் கொள்ள அநுமதிப்பர், இராணுவப் பாதுகாப்புகள் முதல் சகல உரிமைகளும் ரஷியாவைப் போலவே தனித்தனியான முறைகளில் விளங்கும்! அது போலவே, மிகவும் வலிமை வாய்ந்த ஒரு மத்திய திராவிட ஐக்கியக் குடியரசு அரசாங்கத் தலைமைக் காரியாலயத்தையும் பலப்படுத்தி வைத்துக் கொள்வர்! இத்தகைய திறமைவாய்ந்த திராவிட ஐக்கியக்குடியரசு ஆட்சிக்காலத்தில் தான், சில ஐந்து வருடத்திட்டங்களின் மூலம் திராவிட மக்கள் மக்களாக வாழ முடியும்! திராவிட நாடும் உலக வல்லரசுகளில் ஒன்றாக விளங்க முடியும்.

வருக திராவிட ஐக்கியக்
குடியரசு வாழ்க்கை!

நிர்மூலம் ஆக்குவோம் அநீதியை!

ஒன்றே குலமாம் ஒருவன் தலைவன்
ஒற்றுமை முற்றும் பெற்று
நன்றே வாழும் வளமிகு நாடு
நமது திராவிட நாடு
என்றே இறும்பூதெய்து முன்னாள்
இருந்தார் இன்ப வாழ்வில்
சென்றே நஞ்சு கலந்ததுபோலச்
செய்தார் ஆரியர் சூழ்ச்சி (1)

தன்தன் கையே தனக்குதவி
தனிநாடு திராவிடர்க்குதவி
தின்தின் என்றுணவூட்டி வளர்த்த
திண்தோளன் திராவிடனுக்காரியன்
மண்மண் என்னும் ஆசையூட்டினான்
மக்கள்மீது ஆதிக்கவெறி மூட்டினான்
பொன்பொன் என்றுபெற்றான் பரிசுகள்
போதும்போதும் நிறுத்தவன் போக்கை! (2)

ஓதியவேதம் போதும் இனி
ஓதுவீர் அபேதவாதம் பல
சாதிய சமயம் சாத்திரங்களுக்குச்
சவக்குழி தோண்டுவீர் ! எங்கும்
போதிய உணவுடை ஓய்வும்
பொங்கும் மகிழ்வு செய்வீர்
மோதிய மூடர் வாதங்களுக்கோர்
முற்றுப் புள்ளி வைப்பீர் ! (3

ஒன்றுயிர் வாழ மற்றொன்றை
ஒழித்ததன் ஊனை உண்டு
என்றென்றும் உலகில் சீவர்கள்
எண்ணிலாப் போர் புரிவனவன்றே
அன்றன்று ஆன படியளந்து
அவற்றில் ஒன்றையும் விடாது
சென்றுயிர் ஊட்டி வளர்ப்பவனெனச்
செப்பவும் ஒருவன் உண்டோ ? (4)

மக்களில் முக்கால் பாகம்
மண்ணிலுங் கடல் மலையிலும்
சிக்கலில் சிக்கிச் சொட்டுச்
சொட்டாய் வடிக்கும் ரத்தம்
நக்கலில் மிக்காராகி எந்தாளும்
நன்றி கெட்டார் பணக்காரர்
எக்கலில் இருக்கும் செல்வம்
இறைவன் ஈந்தது உண்மையாமோ ? (5)

நம்நாடு நமக்குச் சொந்தமில்லையா!
நாம் வாழ நமக்கிங்கே உரிமையில்லையா!
தம்மோடு நம்மைச் சமமாய்க்கருதத்
தயங்கும் தடியருக்கு ஏதுரிமை?
எம்மோடு தோள்கோத்து இந்நாட்டில்
எந்நாளும் உழைக்கும் எம்மவர்
சும்மாடு மாற்ருத சோம்பேரிக்குச்
சுடுகாடுங் கூடாது எம்நாட்டில்! (6)

ஆத்திரங் கொண்டு எழுவீர்
ஆதித் திராவிடர் நம்மைச்
சூத்திரன் என்று சொல்லும்
சூதர்கள் எழுதிய மனுச்
சாத்திரம் சடங்கு சட்டங்களுக்கோர்
சமாதி கட்டிடுவோம்! சமத்துவ
கோத்திரம் கொண்டவர் திராவிட ரென்று
கொட்டும் தனியரசு நாட்டுவோம்! (7)

துக்கமே நிறைத்து வைக்கும்
துட்டர்முடி ஆட்சியன்ரே! சிலர்
பக்கமே குவிக்கும் செல்வம்
பகுத்தறிவு மிக்கநாள் இந்நாளும்
வெக்கமே அற்ருர் விதி என்ருர்
வினைஎன்ருர் விவரம் அறியாத்
துக்கமே தூக்கமாய்த் தூங்குங்கால்
துணைவனே இறைவன் துலக்கு! (8)

நாடுடைய நாம் நலங் கெடும்படி
நால்வகைச் சாதி முறை
கேடுடைய ஆரியர் சூழ்ச்சிகள்
கேட்டோம் கெட்டோம் அந்நாள்
பீடுடைய திராவிடப் பிரிவினை
பெற்றே தீர்வோம் இந்நாள்
ஏடுடைய பெரும்புலவீர் பாக்கள்
எழுதுவீர் இனஎழுச்சி உற்றே! (9)

திக்கெட்டும் பரவட்டும் திராவிடர்
தியாகம் திறமை தீரம்
முக்கட்டும் ஆரியம் முணங்கட்டும்
முடியட்டும் சூழ்ச்சி மடியட்டும்
வெக்கட்டும் விபீஷணர்கள் வீணாய்
விளைத்த தீங்கெல்லாம் விலக்கட்டும்
நிற்கட்டும் ஓர் நிலையாய் நிமிர்ந்து
நிர்மூலம் ஆக்குவோம் அநீதியை! (10)

எதிர்பாருங்கள்!

எமது அடுத்த வெளியீடுகள்!

கனவில் கண்ட கவி

[ஆரம்பம் முதல் இறுதிவரையில் இன எழுச்சிப் பேரிகை இடையறாது முழங்கும் கவிகள்! கருப்புச் சட்டைப்படை வீரர்களின் தியாகம், திறமை, தீரம் தீட்டப்பட்டுள்ள கவிச் சித்திரங்களாகும்]

ஐக்கிய திராவிடம்

[இந்திய உபகண்டத்திலிருந்து திராவிட நாடு தனியரசாக ஏன் பிரிய வேண்டும்? எப்படிப் பிரிவினை பெறுவது? பிரிந்த திராவிடம் தனது உட்பிரிவுகளாகிய ஆந்திரம், தமிழகம், கேரளம், கன்னடம், துளுவம் முதலிய வட்டாரங்களுடன் கூட்டுறவு கொண்டு ஐக்கிய குடியரசாட்சி நிறுவுவதெப்படி என்ற பிரச்னைகளை விளக்கி எளிய தமிழ் நடையுடன் வெளிவரும்]

திராவிட கலா நிலையம்

:: :: சென்னை :: ::